# வாழ்வகம்

## விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

## அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

## உதயநாளும் பரிசுத்தினமும் - 2019

## ஆண்டறிக்கை - 2018



**இடம்**

**செல்லா மண்டபம் – வாழ்வகம்**

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.

**காலம்**

**11.01.2019 வெள்ளிக்கிழமை**

காலை 08.45 மணி

**வாழ்வக அன்னையின் முதன்மை மாணவரும்**
**வாழ்வகத்தை வழிநடத்திச்செல்ல**
**அன்னையால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும்...**




**திரு.ஆறுமுகம் ரவீந்திரன் (JP) அவர்கள்**
(BA, PGDE,M Ed, SLTES III)
**விரிவுரையாளர் - கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி**
**(தலைவர் வாழ்வகம்)**

# வாழ்வக அன்னை



அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

(வாழ்வக ஸ்தாபகர்)

# வாழ்வகம்
# விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

## அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

## உதயநாளும் பரிசுத்தினமும் – 2019

## ஆண்டறிக்கை – 2018

# வாழ்வகம்
# விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

## மகுட வாசகம்

*கல்வியே ஒளி கல்வியே வழி*

## Motto

Education is light Education is path

## தூரநோக்கு

விழிப்புல வலுவிழந்தவர்களை கல்வியின் ஊடாக அறிவாற்றலும் செயற்றிறனும் வாழ்வின் சவால்கள் அனைத்தையும் எதிர்கொள்ளக் கூடிய சமநிலை ஆளுமையும் மிக்கவர்களாக்குதல்.

## Vision

*To empower visually handicapped to devolop the potential balanced personality with knowledge and efficiancy for facing the challenging life through education*

## பணிக்கூற்று

விழிப்புலவலுவிழந்தவர்கள், கல்வியின் ஊடாக உள்ளத் தெளிவு பெற்று முழுமையாகத் தம்மை அறிவதன் மூலமாக கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு ஏனையவர்கள் யாவருக்கும் கிடைக்கும் அதே உரிமைகளையும் வாய்ப்புக்களையும் சமமாகப் பெற்று சிறந்த பண்புத்தரத்துடன் வாழ வழிசெய்தல்.

## Mission

*To prepare visually handicapped to pave the way for living with good qualities using available resources in oder to have equal opportunities and rights like others have by getting purity of mind and realizing themselves completely through education*



## வாழ்வக அன்னை துதி

**பல்லவி**

ஒளி காட்டியே எங்கள் வழிகாட்டியே தெளிவோடு
வழிசேர்த்த வழிகாட்டியே

**அனுபல்லவி**

அன்னை அன்னலட்சுமியைப் போற்றுவோம்
அவர் நினைவிலெமை உரு வாக்குவோம்.
(ஒளிகாட்டியே......)

**சரணங்கள்**

பார்வையிலா மனிதரென்ன நடைப்பிணங்களா
பாரிலவர்க் குதவிடுவோர் எவரும் இல்லையா
ஆர் வருவார் என்றிருந்த வேளையிலே
ஆதரிக்க அன்னை வந்தார் கடவுள்போலவே
(ஒளி காட்டியே......)

கல்வி தந்தார் கவின் கலைகள் பயிற்றுவித்தார்
கண்போலக் காத்தவையில் முந்தவைத்தார்
பல்விதமாய்த் தொழில் பலவும் கற்றுயர்ந்தே
பண்புநிறை இன்பவாழ்வை எமக்களித்தார்.
(ஒளி காட்டியே......)

வாழ்வகமாம் கனிமரத்தை நாட்டிவைத்தார் - அதில்
வந்தமரும் குஞ்சுகளுக்கு ஊட்டிவிட்டார்
ஆள் உலகை என்றுதெம்பாய் ஆசிகூறி
ஆற்றலராய் உலகில்நட மாடவைத்தார்.

(ஒளி காட்டியே......)

அன்னையாகினார் எங்கள் தந்தையாகினார்
ஆதரித்து அருளுகின்ற தெய்வமாகினார்
பின்னை யாவரும் போற்றும் வண்ணமாய்
எம்மையாக்கினார் அன்ன லட்சுமி அன்னை.

(ஒளி காட்டியே.....)



**திரு. சுப்ரமணியம் ஸ்ரீகுமரன் (இயல்வாணன்)** SLEAS

உதவிக்கல்விப் பணிப்பாளர்.

வாழ்வக அன்னையின் துதியை யாத்து தனக்கு பெருமைதேடிக் கொண்டவர்.

# கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி
## தீபமாய் தெய்வமாய்

நமது ஈழமணித் திருநாட்டின் விசேட கல்வி வரலாற்றில் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி என்ற நாமம் எப்போதும் தனித்துவமாய் மிளிர்ந்துகொண்டிருக்கும். "எங்கள் கண்களிலே ஒளியில்லையே." "இந்த ஒளியற்ற கண்களால் இநதப் பரந்த உலகை நாம் எப்படித் தரிசிக்க முடியும்? களிப்புடன் எப்படி வாழ முடியும்? என்று கலங்கிக் கண்ணீர் வடித்து நின்ற பிள்ளைகளின் கரங்களைக் கருணையோடு பற்றி, கல்வி வெளிச்சத்தின் முன் அழைத்துவந்தவர் இந்த அன்னை. மருத்துவ விஞ்ஞானத்தால் உங்கள் கண்களைப் பெற்றுத்தர முடியாது போகலாம். ஆனால், கல்வி என்னும் ஒப்பில்லாக் கண்ணை என்னால் உங்களுக்குத் தர முடியும். அதன் துணையோடு நீங்களும் இந்தக் காசினியில் களிப்போடு வாழமுடியும் என்று தன்னம்பிக்கையோடு உரைத்தார் இந்தத் தாய். வெறும் வார்த்தையோடு மட்டும் நின்றுவிடாமல் தன் பணி வாழ்க்கை மூலம் அதைச் சாதித்தும் காட்டினார்.

1972 ல் இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் கீழ் ஒரு விசேட ஆசிரியையாய் இணைந்துகொண்ட இவர் விழிப்புல வலுவிழந்த பல பிள்ளைகளை வெற்றிகரமாய்க் கல்வி நீரோட்டத்தில் இணையவைத்தார்.

தன் பணி ஓய்வுக்குப் பின்னரும் தான் வரித்துக்கொண்ட இந்தச் சீரிய பணியை மேலும் வலுவுடன் முன்னெடுக்கவேண்டும் என்னும் நோக்கோடு 29.06.1988 ல் வாழ்வக நிறுவனத்தை உருவாக்கினார்.

தன் இறுதி மூச்சுள்ளவரை விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகப் பலவாறு சிந்தித்து அயராது செயற்பட்ட செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் 11.09.2006 இறையடி எய்தினார்.

தான் வாழும் காலத்தில் எந்தவிதப் பெயரையோ புகழையோ விரும்பாத இந்த அன்னைக்கு, 2010 ஆம் ஆண்டு தேகாந்த நிலையில் கௌரவ கலாநிதிப் பட்டம்வழங்கியதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனக்குப் பெருமை தேடிக் கொண்டது.

திக்கற்றுத்தவித்த விழிப்புலவலுவிழந்த பிள்ளைகளுக்குத் திசை காட்டும் தீபமாய், தெய்வமாய்த் திகழ்ந்த இந்த அன்னை இன்று நம்மோடில்லாவிட்டாலும் அவர் தொடக்கி வைத்த பணிகள் இன்றும் தொடர்ந்தவண்ணமுள்ளன. அவரால் வித்தூன்றப்பட்ட வாழ்வகம் இன்று விருட்சமாய்த் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

உண்மையான சேவையையும் உன்னத மனித நேயத்தையும் நேசிக்கின்றவர்களின் உள்ளங்களில் அன்னை அன்னலட்சுமி சின்னத்தம்பி இன்றும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்.

அவரது சேவைக் மேன்மேலும் வளர, வலுப்பெற நாம் அனைவரும் பணிசெய்வோமாக.

## வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

## வாழ்வகமும் அதன் வளம் மிக்க பணிகளும்

பல்வேறுகண் பார்வை இழப்பு அல்லது பாதிப்பு ஒருவருக்குப் பல்வேறு காரணங்களால் ஏற்படக்கூடும். அவ்வாறு ஒருவர் தன் கண் பார்வையை இழந்துவிட்டால் அத்தோடு அவரின் வாழ்வே முடிந்து விட்டது எனக் கருதுவது முற்றிலும் தவறானது. பார்வையற்றவர் களாலும் இவ்வுலகில் மகிழ்ச்சியாக கௌரவமாக வாழமுடியும் என்பது இன்று ஆணித்தரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இவர்களின் இவ்விதமான நல்வாழ்வுக்குக் கல்வி மிகமிக இன்றியமையாதது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கண்களின் இழப்பை கல்வியால் மட்டுமே ஈடுசெய்ய முடியும். எனினும் இன்றுங்கூட நம் சமூகத்தில் கல்வி வாய்ப்புக் கிடைக்காத விழிப்புல வலுவிழந்த பிள்ளகள் பலர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களின் பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் இப்பிள்ளைகளை எவ்வாறு வழிநடத்துவது, இவர்களுக்கு எவ்வாறு கல்வியூட்டுவது என்பவை தொடர்பாக விழிப்புணர்வு அற்றவர்களாக அல்லது மிகக் குறைந்தவர்களாகவே உள்ளனர். இந்நிலையில் இவ்வாறான பிள்ளைகளைத் தேடிக் கண்டறிந்து இவர்களுக்குப் பொருத்தமான கல்வி வாய்ப்புக்களையும் இதர வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இவர்களையும் கௌரவமான பயன் மிக்க பிரஜைகளாக்கும் நோக்குடனேயே வாழ்வகம் ஸ்தாபிக்கப்பட்டது.

**வரலாறு**

இலங்கை வாழ் தமிழ்பேசும் விழிப்புல வலுவிழந்த பிள்ளை களின் கல்வி வளர்ச்சியிலே காத்திரமான பங்காற்றிய ஒப்பற்ற ஆசிரியையான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் அரும்முயற்சியால் வாழ்வகம் 29.06.1988 அன்று தெல்லிப்பழையில் உதயமாயிற்று. தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள வாடகை வீடொன்றில் பதின்மூன்று பிள்ளை களுடன் வாழ்வகத்தின் பணிகள் ஆரம்பமாயின. எனினும் அன்றைய யுத்த சூழ்நிலை காரணமாக 1990 ஆம் ஆண்டு வாழ்வகம் அங்கிருந்து இடம்பெயர நேர்ந்தது.

மீண்டும் 1995 ஆம் ஆண்டு உடுவில் மல்வம் பகுதியில் வாடகை வீடொன்று பெறப்பட்டு அங்கு வாழ்வகத்தின் பணிகள் தொடரலாயின. இருந்தபோதிலும் 1995 ஆம் ஆண்டு மீண்டுமொரு பாரிய இடப்பெயர்வைச் சந்திக்க நேர்ந்தது. கூடவே பெருமளவு பொருள் இழப்புகளும் ஏற்பட்டன. வாழ்வகத்தின் அன்றைய தலைவரும் ஸ்தாபகருமான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் இந்த இடப்பெயர்வுகளைக் கண்டு சற்றேனும் மனம் தளரவில்லை. மானிப்பாய் சத்தியசாயி சமிதியினரின் உதவியோடு மானிப்பாயில் வீடொன்று வாடகைக்குப் பெறப்பட்டு 1997 ஆம்

ஆண்டு வாழ்வகத்தின் பணிகள் மீண்டும் அங்கு ஆரம்பமாயின. இவ்வேளையில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் மேற்கொண்ட அரும் முயற்சியின் பயனாக லண்டனிலுள்ள தமிழ் அனாதைகள் நம்பிக்கை நிதியத்தினரிடமிருந்து வாழ்வகத்துக்கெனச் சொந்தமாக ஒரு காணியைக் கொள்வனவு செய்வதற்கென ஒரு தொகை பணம் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது. இதன் பயனாக வாழ்வகம் 2003 ஆம் ஆண்டு தற்போதைய அதன் சொந்த வதிவிடத்தில் நிலைநிறுத்தப்பட்டது.

## பணிகளும் நலன்புரித் திட்டங்களும்

விழிப்புலவலுவிழந்த பிள்ளைகள் தடையேதுமின்றி தமது கல்வியை மேற்கொள்ளவும் சாத்தியமான இதர வாய்ப்புக்கள் அனைத்தையும் பெற்றுத் தமது வாழ்வை வளப்படுத்திக்கொள்ளவும் வேண்டிய அனைத்து வசதிகளையும் வாழ்வகம் முற்றிலும் இலவசமாக வழங்கி வருகின்றது. தற்போது வாழ்வகத்தில் ஆண், பெண் இருபாலாருமாக நாற்பத்தெட்டு பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் யாவரும் எமது நாட்டின் தற்போதைய கல்வி செல்நெறி களுக்கமைவாக ஏனைய சாதாரண பிள்ளைகளோடு இணைந்து தமது கல்வியினை மேற்கொண்டு வருகின்றனர். பத்து மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பினை மேற்கொண்டு உள்ளனர். மேலும் ஒரு மாணவி பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி யுள்ளார். இவர்கள் தவிர்ந்த ஏனைய மூவர் க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றி அவர்களுள் இருவர் சித்தி பெற்றுள்ளனர். ஏனைய மாணவர்கள் யாவரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் தமது கல்வியை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, தங்குமிடம், அன்றாடப் பாவனைப் பொருட்கள், மருத்துவம், போக்குவரத்து வசதிகள், கல்விக்குத் தேவையான விசேட உபகரணங்கள் போன்ற அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தேவை கருதி ஒருசில மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்பிதற்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது. கணனிக் கல்வி, ஆங்கிலக்கல்வி என்பன பிரத்தியேகமாக அளிக்கப்படுகின்றன. அத்தோடு சங்கீதம், நடனம் போன்ற கலைகளும் பயிற்றுவிக்கப் படுகின்றன.

விழிப்புல வலுவிழந்த மாணவர்களுக்கு விசேடமாக இன்றி யமையாத சுயமாக நடமாடுதல் பொருட்களைக் கையாளுதல், அன்றாட வேலைகளை மேற்கொள்ளல் போன்ற இயக்கத்திறன் சார் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

மேலும் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்த உதவுதொகைகள் வழங்கப்படுவதோடு அவர்களின் தேவைகள் யாவுமே வாழ்வகத்தால் பூர்த்திசெய்யப்படுகின்றன.

வாழ்வகத்துக்கு வெளியே உள்ள சாதாரண பாடசாலை களில் பயிலும் வறிய மாணவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் திட்டமொன்றினையும் எமது ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் ஞாபகார்த்தமாக முன்னெடுத்து வருகின்றோம்.

**தேவைகள்**

1. விளையாட்டு மைதானம்

வாழ்வகப் பிள்ளைகளுக்க ஒரு விளையாட்டு மைதானம் தேவையாக உள்ளது. இதனைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் மேற்கொண்ட முயற்சிகள் இதுவரை பலனளிக்கவில்லை.

2. விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுக்கான கல்வி விளையாட்டு மற்றும் ஏனைய விசேட உபகரணங்கள் பல இன்னும் தேவையாக உள்ளன.

3. விசேட பயிற்சி பெற்ற ஆளணியினர்

எமது பிள்ளைகளைக் கல்வி மற்றும் ஏனைற துறை களில் பயிற்றவிப்பதற்கான தகுந்த ஆளணியினர் இல்லாத நிலையே பெருமளவில் காணப்படுகின்றது.

**எதிர்காலத் திட்டங்கள்**

1. கல்விச் செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்தலும் புதிய புதிய துறைகளில் எமது பிள்ளைகள் கற்பதற்கான வாய்புக்களைப் பெற்றுக் கொடுத்தலும்.

2. விளையாட்டுத்துறையில் எமது பிள்ளைகளை வளர்த்தெடுத் தலும் தேசிய சர்வதேச போட்டிகளில் பங்குகொள்வதற்கான வாய்ப் புக்களைப் பெற்றுக்கொடுத்தலும்.

3. யாதேனுமொரு பல்கலைக்கழகத்துடன் இணைந்து விசேட கல்வி தொடர்பான கற்கைநெறியொன்றை ஆரம்பித்தல்.

4. கற்றல் இயலாமையைக் கொண்ட மாணவர்களுக்காகவும் கல்வி வாய்ப்பினை இழந்த விழிப்புல வலுவிழந்தோர்களுக்காகவும் வினைத்திறன் மிக்க சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டமொன்றை ஆரம்பித்தல்.

5. பாடநூல்கள் மற்றும் பொதுவான நூல்களை ஒலிப் புத்தகங் களாக உருவாக்கலும் விநியோகித்தலும்.

விழிப்புல வலுவிழந்தோரின் மேம்பாட்டுக்காக வாழ்வகத்தின் பணிகள் தொடர்கின்றன, வளர்கின்றன. விழிப்புல வலுவிழந்த பிள்ளை களுக்கான வாழ்வகத்தின் கதவுகள் எப்போதுமே திறந்திருக்கின்றன.

வாழ்வக சமூகம்

தொலைபேசி இலக்கங்கள்: 021 2240146, 076 8286331

வங்கிக் கணக்குகள்:

1. இலங்கை வங்கி - சுன்னாகம் 7471582 (Swift Code BCEYLKLX)
2. ஹற்றன் நஷனல் வங்கி
   - சுன்னாகம் 117010003186 (Swift Code S-C-HBLILKLX)

குறிப்பு:

யாதாவதொரு கண்பார்வையற்ற அல்ல எழுத்துக்களை முகத்துக்கு மிகவும் அருகில் வைத்துப் பார்க்கின்ற அளவுக்கு குறைந்த பார்வையுடைய பிள்ளைகளைப் பற்றிய தகவல்கள் உங்களுக்குத் தெரிந்திருந்தால் தயைகூர்ந்து அவ்விபரங்களை எமக்குத் தாருங்கள். அப்பிள்ளையின் வீடு தேடிச்சென்று வேண்டிய அனைத்து உதவிகளையும் முற்றிலும் இலவசமாக இதயசுத்தியோடு வழங்குவதற்கு வாழ்வகம் எப்போதுமே தயாராக இருக்கின்றது.

முகவரி:

தலைவர்,
வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

## தலைவரின் உள்ளத்திலிருந்து.....



அன்பார்ந்த உறவுகளே,

மலர்ந்திருக்கின்ற இந்தப் புத்தாண்டிலே மேலும் உத்வேகத் தோடும் எதிர்பார்ப்புக்களோடும் புதிய பல சிந்தனைகளோடும் எமது பணிகளை முன்னெடுக்க எண்ணியுள்ளோம். இந்த முன்னெடுப்புக் களுக்கெல்லாம் முதுகெலும்பாக இருப்பவர்கள் எமது அன்பர்களாகிய நீங்களே என்றால் அதில் மிகையேதுமில்லை. கல்வியே எமது விழிப்புலவலுவிழந்த பிள்ளைகளை வளப்படுத்தும், வலுப்படுத்தும் என்பதில் நிச்சயமாக யார்க்கும் இரு கருத்துக்கள் இருக்கமுடியாது. இந்த வகையில், எமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக நாம் எம்மாலான அனைத்தையும் ஆற்றிவருகின்றோம். இதன் ஒரு அம்சமாக நாம் இவ்வாண்டினை நூலறிவு மேம்பாட்டுக்கான ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளோம். சாதாரண எழுத்து வடிவிலுள்ள நூல்களை எமது பிள்ளைகளால் படிக்க முடியாது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில், இவற்றை ஒலி வடிவ நூல்களாக உரு மாற்றி வழங்குவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். மேலும் இவ்விதமான ஒலி வடிவ நூல்களை சாத்தியமான இடங்களிலிருந்து பெற்றுக கொடுக்கவும் திட்டமிட்டுள்ளோம்.இதன் மூலம் எமது பிள்ளைகளின் அறிவுப் பரப்பை இன்னும் இன்னும் விசாலிக்க முடியுமென எதிர்பார்க்கின்றோம்.

இன்று வாழ்வகத்தில் தங்கியிருக்கின்ற அனைத்துப் பிள்ளை களும் நாளை சமூக நீரோட்டத்தோடு இணைந்து வாழவேண்டியவர்களே. அந்த வகையில், அடிப்படை வாழ்க்கைத் திறன்கள் யாவும் அவர் களுக்கும் அளிக்கப்படவேண்டும். விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளை வெறும் பொம்மைகளாக இருக்கவிட்டு, அவர்களுக்காக அவர்கள் செய்யவேண்டிய அன்றாடப் பணிகளை வேறு யாராவதொருவர் செய்துகொடுப்பதென்பது அவர்களை வாழ்க்கைப் பாதையிலிருந்து பின்தள்ளுகின்ற செயலாகவே அமையும். இப்புதிய ஆண்டில் இந்த விடயத்திலும் நாம் சற்றே அதிகமாகக் கவனம் செலுத்த எண்ணியுள்ளோம். இதற்கு எமக்கு அதிகமான ஆளணி வசதிகள் தேவைப்படவே செய்யும். இருந்தாலும் இவ்விடயத்தில் நிச்சயமாக நாம் ஏதாவது செய்தே ஆகவேண்டும். "நமக்கென்று பூமியிலே கடமைகள் உண்டு அதை நமக்காக நம் கையால் செய்வது நன்று." என்ற கவியரசர் கண்ணதாசனின் வரிகள் நமக்கு மிகவும் பொருந்து வனவாகவே உள்ளன.

இந்தப் புதிய ஆண்டில் எமது வாழ்வகத்தின் பயணம் வளமாயமைய, நாம் எண்ணியவை யாவும் எண்ணியாங்கு ஈடேற, உங்களைப் போன்றவர்களின் உண்மை அன்பு உறுதுணை புரியும் என்பதில் எமக்கு எவ்வித ஐயமுமில்லை.

உங்கள் அனைவருக்கும் எனது ஆழ் மனதில் ஊற்றெடுக்கும் அன்பையும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் காணிக்கை ஆக்குகின்றேன்.

**திரு.ஆறுமுகம் ரவீந்திரன்**
தலைவர்,
வாழ்வகம்.

## செயலாளரின் சிந்தனையில்.....



வாழ்வக வரலாற்று தடங்களிலே எனது மாணவப்பருவம் தொடக்கம் இன்று வரை அதன் வளர்ச்சியிலும் வாழ்விலும் கண்டு கொண்ட பல விடயங்களை இன்று நான் மீள நினைக்கின்றேன். 1988 ஆம் ஆண்டு தெல்லிப்பழை மண்ணில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வாழ்வகம் பல்வேறு நெருக்கடி களையும் சவால்களையும் எதிர்கொண்டு இன்று சபாபதிப்பிள்ளை வீதி சுன்னாகம் என்ற முகவரியில் வானுயர்ந்து வளர்ந்து நிற்பது கண்டு பெருமிதம் அடைகின்றேன்.

வாழ்வக அன்னை அவர்களின் தூரநோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் அன்னை அவர்களின் அடியொற்றி அவரது முதன்மை மாணவரான திருவாளர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையிலும் அவரது துணைவியாரும் உபதலைவரும் ஆகிய திருமதி மோகனவதனி ரவீந்திரன் அவர்களது வழிகாட்டலிலும் இன்று தொய்வேதுமின்றி வளர்ந்து வருவது கண்கூடு.

வாழ்வகம் வருடாவருடம் கல்வியிலும் ஏனைய இணைபாட விதான செயற்பாடுகளிலும் தேசிய மட்டம் வரை பெற்று வரும் சாதனைகள் அதன் உன்னத வளர்ச்சியின் வெளிப்பாடுகளாக சுட்டி நிற்கின்றன. இவ்வாண்டும் க.பொ.த. உயர்தரப்பரீட்சைப் பெறுபேறு மேலும் மேலும் யாவருக்கும் உற்சாகத்தினை தந்து நிற்கின்றது.

நிறைவாக வாழ்வகம் என்ற புனித பூமியில் பணி செய்யக் கிடைத்த பாக்கியத்தினை என் மானிடப்பிறவியின் பெரும்பயன் எனக்கொண்டு கற்பிக்கும் உதவியாளராய், அங்கத்தவராய், உப செயலாளராய் ,செயலாளராய் பல பணிகள் தொட்டு முகாமைத்துவம் வரை என்னையும் வளர்த்து என்னூடே வாழ்வகப் பிள்ளைகளுக்கும் பணிசெய்து மனநிறைவுடன் வாழ்வகத்தில் சூட்சுமமாய் உறங்கி யிருந்து ஆசீர்வதிக்கும் அன்னையின் பாதம் பணிந்து வாழ்வகக் கொடி ஓங்கி உயரப்பறக்க வேண்டுமென வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

**திரு. V.K.ரவீகரன்** J.P
செயலாளர்,
வாழ்வகம்.

## பொருளாளரின் செய்தி



வாழ்வக நிறுவனமானது மானிப்பாயில் இயங்கிய காலத்தில் ஒரு பகுதிநேர ஆசிரியராகத் தொண்டு அடிப்படையில் பணியாற்றிய அந்த நாட்கள் மனதில் நிழலாடுகின்றன. அன்று ஆரம்பித்த அந்த உறவு படிப்படியாய் வளர்ந்து இன்று நான் வாழ்வகத்தின் உயர் பதவியான பொருளாளராய்ப் பணியாற்றுமளவுக்கு வலுப் பெற்றுள்ளது. விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் கல்வியைப் பொறுத்த மட்டிலே வாழ்வகம் ஆற்றி வருகின்ற பணிகள் மிக மிகக் காத்திரமானவை. அதேவேளை, இலங்கையிலுள்ள இது போன்ற நிறுவனங்களோடு ஒப்பிடுகின்றபோது எமது நிறுவனமானது அவற்றிலெல்லாமிருந்து வேறுபட்ட தனித்துவமான ஒரு நிறுவனமாய் இயங்கி வருவதையும் இங்கு குறிப்பிடவேண்டும். இத்தனைக்கும் காரணம் எமது வாழ்வக அன்னையின் தீர்க்கதரிசனமான சிந்தனைகளே என்று கூறின் அதில் மிகையேதுமில்லை. இப்பேற்பட்ட ஓர் உயரிய நிறுவனத்தில் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பினையிட்டு உண்மையிலேயே உளப் பூரிப்படைகின்றேன். நமது இலங்கைத் திருநாடு ஈன்றெடுத்த ஒப்பற்ற சேவையாளரான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் பற்றியும் அவரால் உருவாக்கப்பட்ட வாழ்வக நிறுவனம் பற்றியும் பல்கோணங்களில் விரித்துரைக்க விருப்பமிருக்கின்றபோதிலும் விரிவுக்கஞ்சி நிறுத்திக்கொள்கிறேன்.

இந்தப் புதிய ஆண்டிலும் நாம் பல புதிய தடங்களைப் பதிப்போம் என்று கூறி, அன்னை அன்னலட்சுமி அவர்களின் பாதம் பணிந்து நிறைவுசெய்கிறேன்.

**திரு.தம்பிஐயா வாமதேவன்**
பொருளாளர்,
வாழ்வகம்.

ஓம் ஸ்ரீஸாயிராமாய நம

# ஆண்டறிக்கை - 2018.

# அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

# உதயநாளும்

# பரிசுத் தினமும் – 2019

எல்லாம் வல்ல பகவானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து கடந்த 2018 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மதிப்பார்ந்த பிரதம அதிதி அவர்களே, சிறப்பு அதிதிகளே, கௌரவ அதிதிகளே மற்றும்,இங்கே கூடியிருக்கின்ற பெரியோர்களே, பெற்றோர்களே, பிள்ளைகளே, நண்பர்களே, நலன்விரும்பிகளே, எமது நிர்வாக சபை அங்கத்தவர்களே உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கங்கள்.

## நிறுவனம்

வாழ்வக நிறுவனமானது கடந்த முப்பத்தொரு ஆண்டு காலமாக இலங்கை வாழ் தமிழ் பேசும் விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகவும் அதன் ஊடான வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காகவும் அயராது பாடுபட்டு வருகின்றது. நடைமுறையிலுள்ள கல்வி செல்நெறிகளுக்கு அமைவாக விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் தமது கல்வியினைப் பெற்றுக்கொள்ள வழி சமைத்து வரும் இந்நிறுவனமானது இலங்கையிலுள்ள ஒரேயொரு தனித்துவமான தொண்டு ஸ்தாபனம் என்று கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

## நிறுவுநர்

வாழ்வக நிறுவனத்தின் ஸ்தாபகரும் முதலாவது தலைவருமான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்கள் எமது ஈழமணித் திருநாடு ஈன்றெடுத்த ஒப்பற்ற பெண்மணிகளுள் ஒருவராவார். யாழ்ப்பாணத்தின் வட கோடியிலுள்ள மாவிட்டபுரம் என்னும் அழகிய கிராமத்தில் சின்னத்தம்பி, தையல்பிள்ளை தம்பதியினரின் இளைய மகளாக 11.01.1937 அன்று அவதரித்தார். துணிச்சலும் நல்லொழுக்கமும் திறமையும் இயல்பாகவே அமையப் பெற்ற இவர் 1958 ஆம் ஆண்டு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியையாகத் தமது பணி வாழ்வை ஆரம்பித்தார். 1971 ஆம் ஆண்டு மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விசேட கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த இவர் 1972 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தில் "இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட

கல்வித் திட்டத்தினைச்" செயற்படுத்தும் பெரும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். தமிழ் பேசும் விழிப்புல வலுவிழந்த பிள்ளை களின் கல்வி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான மாற்றம் நிகழ இதுவே வழிவகுத்தது எனலாம். இவரின் அரும் பணியின் பயனாக சுமார் இருபதுக்கும் மேற்பட்ட விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் பட்டதாரிகளாக உயர்வுகண்டனர். இன்னும் பலர் பல்வேறு நிலைகளில் கல்வி கற்றுப் பயனடைந்தனர். தான் ஆரம்பித்துவைத்த இந்தக் கல்விப் பணியானது, தனது பணி ஓய்வுக்குப் பின்னரும் தொடரவேண்டும், பெற்றோர்களின் அறியாமை காரணமாக தீங்குறு நிலையிலிருக்கும் விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளை மீட்டெடுத்து அவர்களின் வாழ்வை வளப்படுத்தவேண்டுமென அவர் சிந்தித்ததன் பயனாகவே 1988 ஆம் ஆண்டு தெல்லிப்பளையில் வாழ்வகம் உதயமாயிற்று. அன்றுமுதல் அன்னையவர்கள் தானும் பிள்ளை களோடு வாழ்வகத்திலேயே தங்கியிருந்து அப் பிள்ளைகளின் முன்னேற்றமொன்றையே இலட்சியமாகக் கொண்டு இரவு பகல் பாராது பாடுபட்டு வந்தார். எத்தனையோ இன்னல்கள், சொல்லொணா வேதனைகள், இடப்பெயர்வுகள் ஏற்பட்டபோதிலும் அவர் சற்றேனும் மனம் தளரவில்லை. தான் உருவாக்கிய வாழ்வகத்தை அது தற்போதுள்ள அதன் சொந்த வதிவிடத்தில் நிலைநிறுத்துவதிலும் அவர் வெற்றிகண்டார்.

தன் உடல்நிலை நாளுக்குநாள் நலிவடைந்து வருவதை நன்கு அறிந்திருந்த அன்னையவர்கள் தனக்குப் பின் தான் உயிருக்குயிராய் நேசித்து வரும் வாழ்வகத்தை வழிநடத்திச் செல்வதற்குத் தனது மாணவர்களுள் ஒருவரான திரு. ஆறுமுகம் ரவீந்திரன் அவர்களைத் தேர்ந்தெடுத்து, தகுந்த முறையில் அவரை வளர்த்தெடுத்தும் வந்தார்.

09.09.2006 அன்று சடுதியாய் நோய்வாய்ப்பட்ட அன்னை அவர்கள் 11.09.2006 அன்று மாலை இறையடி எய்தினார். அவரின் விருப்பம் போலவே அவரது மாணாக்கரான திரு. ஆறுமுகம் ரவீந்திரன் அவர்கள் 17.09.2006 அன்று நடைபெற்ற விசேட நிர்வாகக் குழுக் கூட்டத்தில் வாழ்வக நிறுவனத்தின் பதில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் மேற்கொள்ளப்பட்ட யாப்பு சீர்திருத் தங்களின் பிரகாரம் திரு. ரவீந்திரன் அவர்கள் வாழ்வக நிறுவனத்தின் ஆயுட்காலத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அன்னையவர்களின் முதலாவது நினைவுநாளான 11.09.2007 அன்று அவரது திரு உருவச் சிலை அவரது மாணாக்கரும் வாழ்வக நிறுவனத்தின் தலைவருமான திரு.ஆறுமுகம் ரவீந்திரன் அவர்களால்

06.06.2010 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அன்னையவர்களின் ஒப்பற்ற சேவைகளைக் கௌரவித்து, தேகாந்த நிலையில் அவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கித் தனக்குப் பெருமை தேடிக்கொண்டது.

அன்னையின் புனித சமாதி அமைந்துள்ள இடத்தில் நோர்வே சிவசுப்பிரமணியர் கோவில் இந்து இளைஞர் அறிவாலயத்தினரின் நிதி அனுசரணையுடன் அமைக்கப்பட்ட அழகிய நினைவாலயம் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களால் 11.12.2012. அன்று திறந்துவைக்கப்பட்டது. சமூகத்திலே மிகவும் தீங்குறு நிலையிலுள்ள விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்துப் பாடுபட்ட எமது ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்கள் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**பிரதம அதிதி**

இன்றைய எமது நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வருகை தந்திருக்கின்ற திரு. செல்வத்துரை பிரணவதாசன் அவர்கள் இருபாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது தாய் தந்தை இருவருமே ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் மிளிர்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இத்தகு கல்விப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்த இவர் க.பொ.த. சாதாரண தரம் வரை கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தனது கல்வியை மேற்கொண்டு, பின், கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தனது விஞ்ஞான மாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

கொழும்பில் ஆசிரியராகவும் பின் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் கணித ஆசிரிய ஆலோசகராகவும் சிறப்பாகப் பணியாற்றிய இவர் 2007 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்று, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் உதவிப் பரீட்சை ஆணையாளராக இணைந்து, பின் பிரதிப் பரீட்சை ஆணையாளராக உயர்வு கண்டார். மேலும் இவர் பட்டப் பின் கல்வி டிப்ளோமா, புள்ளிவிபரவியலில் டிப்ளோமா ஆகிய தகைமை களையும் கொண்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது மாணவர் சமுதாயத்தின் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறைகொண்ட இவர் விசேட தேவை கொண்ட மாணவர்கள்பால் மிகுந்த அன்பும்அக்கறையும் உடையவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இத்தகு சிறப்புக்களும் உயர் பண்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற திரு.செல்வத்துரை பிரணவதாசன் அவர்கள் எமது பிரதம அதிதியாக வாய்த்திருப்பதையிட்டு நாம் மிகுந்த பெருமிதமடைகின்றோம்.

**சிறப்பு அதிதிகள்**

எமது சிறப்பு அதிதிகளில் ஒருவராக வருகை தந்திருக்கின்ற உயர்திரு. கருணாகரன் தர்ஷன் அவர்கள் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சுன்னாகம் திருஞானசம்பந்தா வித்தியா சாலையில் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். தொடர்ந்து கொழும்பில் பிரித்தானியப் பல்கலைக்கழகமொன்றில் தொலைத்தொடர்புப் பொறியியல் துறையில் கற்றுத் தேறிய இவர் டயலொக் தொலைபேசி நிறுவனத்தில் இணைந்துகொண்டார். அரசியலிலும் சமூக சேவையிலும் நாட்டங்கொண்ட இவர் கடந்த உள்ளூராட்சி சபைத் தேருதலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுத் தற்போது எமது வலி. தெற்கு பிரதேச சபையின் தவிசாளராகவும் அரும் பணியாற்றி

யாவருடனும் இனிமையாய்ப் பழகும் உயர் பண்பும் திறமையும் மிக்க திரு. கருணாகரன் தர்ஷன் அவர்கள் எமது சிறப்பு அதிதியாக வருகைதந்திருப்பதையிட்டு பேருவகையடைகின்றோம்.

மற்றுமொரு சிறப்பு அதிதியாக வருகைதந்திருக்கின்ற திரு.யோகராஜா துஷ்யந்தன் அவர்கள் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நல்லூர் ஸ்தான பாடசாலை, யாழ் மத்திய கல்லூரி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் தனது கல்வியை மேற்கொண்ட இவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கல்வித் துறையில் பயின்று கற்பித்தலில் தேசிய டிப்ளோமாப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். 2007ல் பொலநறுவை அல்றிபாய் மகா வித்தியாலயத்திலும் பொலநறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் தனது கல்வித் தரத்தையும் மேம்படுத்தும் வகையில் கல்விமாணிப் பட்டத்தைப் பெற்றதோடு இலங்கை அதிபர் சேவை தரம் 3 பரீட்சையிலும் சித்திபெற்றார். தொடர்ந்து வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி யாலயத்தில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் பணியாற்றி, பின் இலங்கை கல்வி நிர்வாக சேவைகள் பரீட்சையில் சித்திபெற்று 27.12.2017 தொடக்கம் எமது வலிகாமக் கல்வி வலயத்தில் விசேட கல்வித்துறை சார் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

விடா முயற்சியும் திறமையும் சேவை மனப்பாங்கும்கொண்ட திரு.யோகராஜா துஷ்யந்தன் அவர்கள் எமது சிறப்பு அதிதியாக

எமது மற்றுமொரு சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு. செல்லத்துரை திருச்செல்வநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவர். இவரது பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் தனது க.பொ.த. சாதாரண தரம் வரை கற்ற இவர் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் தனத கல்வியைத் தொடர்ந்தார். பின் யாழ் பல்கலைக்கழகத்தில் தனது சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட இவர் தொடர்ந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி கற்கைநெறி களையும் மேற்கொண்டுதனது கல்வித் தகைமையை உயர்த்திக் கொண்டார்.

தான் கற்ற செட்டிகுளம் மகா வித்தியாலயத்திலேயே சிறிது காலமாவது பணியாற்றவேண்டும் என விரும்பிய இவர் அங்கேயே தனது ஆசிரியப் பணியை 1990ல் ஆரம்பித்தார். தொடர்ந்து கொக்குவில் இந்துக்கலல்லூரி, யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யா/சென் சாள்ஸ் வித்தியாலயம் ஆகியவற்றில் தனது ஆசிரியப் பணியைச் சிறப்பாக மேற்கொண்டார்.

2012 ல் G.T.Z. நிறுவனத்தில் சமாதானம் மற்றும், விழுமியக் கல்விப் பிரிவின் வட மாகாண இணைப்பாளராகப் பணியாற்றினார்.திறமையும் உயர் சிந்தனையும் சேவை மனப்பாங்கும் மனித நேயமும் மிக்க இவர் எமது வாழ்வக நிறுவனத்தோடு மிக நெருக்கமான கேண்மை பூண்டொழுகிவருபவர் என்பதும் இங்கு பெருமையோடு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இத்தகு பெருமைகள், சிறப்புக்களுக்குரியவரும் எம்மோடு மிக நேருங்கிய கேண்மை பூண்டொழுகி வருபவருமான திரு.செல்லத்துரை திருச்செல்வநாதன் அவர்கள் இன்று எமது நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப் பதையிட்டு நாம் மட்டில்லா மகிழ்வும் பெருமையும் அடைகின்றோம்.

எமது மற்றுமொரு சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி. சைலஜா ஷெல்ற்றன் ரூபேந்திரா அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவர். இவரது தந்தையார் லயன் திரு. செல்வராஜா (J.P.) அவர்கள் உயர் பிரமுகரும் பன்முக சேவையாளரும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

திருமதி. சைலஜா அவர்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் தனது கல்வியை மேற்கொண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்ட இணைப் பாளராகப் பணியாற்றிய இவர் தற்போது பல்வேறு சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்.

இனிய சுபாவமும் பொறுமையும் சேவை மனப்பாங்கும் கொண்ட திருமதி. சைலஜா ஷெல்றறன் ரூபேந்திரா அவர்கள் இன்று எமது சிறப்பு அதிதியாக வருகைதந்திருப்பது எமக்கு மிக்க மகிழ் வளிக்கின்றது.

**கௌரவ அதிதி**

எமது கௌரவ அதிதியாக வருகைதந்திருக்கின்ற செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களை நான் இங்கு அறிமுகஞ்செய்வது அர்த்தமற்றது. உலகறிந்த ஒரு பேச்சாளர். உண்மையான ஒரு சேவையாளர். எமது வாழ்வக அன்னையால் மகன் ஸ்தானத்திலும் எம் அனைவராலும் அண்ணன் ஸ்தானத்திலும் நேசிக்கப்படுபவர். எமது நிகழ்வுகளுக்கு வருகைதந்து எம்மை வாழ்த்தி ஊக்குவிப்பதை வழக்கமாகக்கொண்டவர்.

இத்தகு முக்கியத்துவம்வாய்ந்த செஞ்சொற்செல்வன் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் இன்றும் எமது கௌரவ விருந்தினராக வருகைதந்திருப்பதையிட்டு நாம் மிக்க பெருமிதமும் உற்சாகமும் அடைகின்றோம்.

எமது இன்றைய நிகழ்வினை அலங்கரித்துக்கொண்டிருக்கும் இப் பெறுமதி மிகு அதிதிகள் அனைவரும் வாழ்வில் அனைத்து வளங்களும் பெற்று என்றும் மகிழ்வுடனும் மன நிறைவுடனும் இனிது வாழ இறையாசி வேண்டி, எமது வாழ்வக அன்னையின் பாதங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

**பிள்ளைகள்**

தற்போது வாழ்வகத்தில் இருபத்தேழு ஆண் பிள்ளைகளும் இருபத்தேழு பெண் பிள்ளைகளுமாக மொத்தமாக ஐம்பத்து நான்கு பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுள் திரு. சொர்ணலிங்கம் தர்மதன் யாழ் பல்கலைக் கழகத்தில் தனது சட்டமாணிக் கற்கை நெறியினைப் பூர்த்திசெய்துள்ளார். செல்வி கட்சனி லோகநாதன், திரு. விஜயகுமார் விஜயலாதன் ஆகியோர் கலைப் பிரிவு நான்காம் ஆண்டிலும் திரு. ம. சசிராஜ் கலைப் பிரிவு மூன்றாம் ஆண்டிலும் திரு. சந்திரலிங்கம் சிவகனிஸ்ரன், செல்வி நாகராசா துஸ்யந்தி ஆகியோர் கலைப் பிரிவு இரண்டாம் ஆண்டிலும் திரு. கலாமோகன் பிரகான், பொன்னம்பலம் தீபன், சிறிதரன் யோகதாஸ் செல்விகள் வில்வராசா நளாயினி, தங்கராசா லாவண்யா ஆகியோர் கலைப்பிரிவு முதலாம் ஆண்டிலும் கல்வி பயில்கின்றனர்.

செல்வி.செல்வராஜா வானுஜா 2016 ல் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் 2A C பெற்று யாழ் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார். இவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

செல்வன் அன்றூட் ஜக்சன், செல்வன் அமலநிதுசன், செல்வி அனந்தினி ஆகியோர்2018 ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். 29.12.2018. அன்று வெளியான மேற்படி பரீட்சை முடிவுகளின் பிரகாரம் செல்வன் அன்ருட் யக்சன் 3A சித்தி பெற்று எமக்குப் பெருமை தேடித் தந்துள்ளார். மேலும் இவர் மாவட்ட ரீதியாக 3 ஆம் இடம்பெற்றார் என்பதும் அகில இலங்கை ரீதியாக 61 ஆம் இடத்தைப் பெற்றார் என்பதும் 2.2094 சற் புள்ளிகளைப் பெற்றார் என்பதும் இங்கு பெருமையோடு குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

மேலும் இப் பரீட்சைக்குத் தோற்றிய மற்றுமொரு மாணவரான செல்வன் அமலநிதுசன் 3C பெறுபேறு பெற்றுச் சித்தியடைந் துள்ளார். மேலும் இப் பரீட்சைக்குத் தோற்றிய செல்வி அனந்தினி 1C, 1S மட்டுமே பெற்றுள்ளார்.

இப்பிள்ளைகள் அனைவரும் தமது கல்விப் பயணத்தைத் தடையின்றித் தொடர்ந்து வாழ்வில் வெற்றிபெறவேண்டும் என்று இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஏனைய மாணவர்களுள், செல்வன் அருண்குமார், செல்வன் கம்சிகன், செல்வன் தினேசன், மற்றும், செல்விகள் லோகேஸ்வரி, டல்சிகா ஆகியோர் க.பொ.த. உயர் தரத்திலும் ஏனைய மாணவர்கள் வெவ்வேறு நிலைகளிலும் கல்வி பயின்று வருகின்றனர். பல்கலைக் கழக மாணவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் கல்வி பயின்று வருகின்றனர்.

**ஊழியர்கள்**

01.01.2018 இல் வாழ்வக நிறுவனத்தில் ஊழியர்களாக திருமதி. ச. குகனேஸ்வரி (சமையலாளர்), செல்வி அ. நவதிரேஸ் (உதவியாளர்), செல்வி அ. சர்மிளா (உதவியாளர்) செல்வி க. நாகபூபதி (உதவி விடுதி மேற்பார்வையாளர்), செல்வி இ. கலைமதி (உதவி விடுதி மேற்பார்வையாளர்), செல்வி ம. துஸ்யந்தி கிளாரா (விசேட ஆசிரியை), செல்வி சி. ஜீவனா (விசேட ஆசிரியை), செல்வி யோ. ஒகஸ்ரினா நிரோஜி (எழுதுநர்), செல்வி எமரென்சியா (பயில் நிலை எழுதுநர்), செல்வி திலகாந்தினி (பயில்நிலை எழுதுநர்)

உத்தியோகத்தர்) த. பாஸ்கரன், (பாதுகாப்பு உத்தியோகத்தர்) அ. சத்தியராஜன் (பாதுகாப்பு உத்தியோகத்தர்), சி. சிவானந்தராஜா (தோட்ட, கால்நடைப் பராமரிப்பாளர்) ஆகியோர் பணியாற்றுகின்றனர். மேலும் பகுதிநேர ஆசிரியர்களாக திருவாளர்கள். இ. வசீகரன், (தமிழ், அரசியல்.),ச. பாலகிருஸ்ணன் (இந்து நாகரிகம்), சி. பிரிதீபன் (கணனிக் கல்வி), சுபேதர் பெர்ணாண்டோ (ஆங்கிலம்):, திருமதி மாலினி உலகநாதன் (சங்கீதம்) செல்விகள் நிரோசனா (கணிதம்), உ. அனக்சிகா (ஆங்கிலம்), ஜெ. சுகன்யா (ஆங்கிலம்), துரேசிகா (நடனம்), ச. லிங்கேஸ்வரன் (கணிதம்), ஆகியோரும் கோண்டாவில் சத்தியசாயி சமித்தியிலிருந்து முற்றிலும் தொண்டு அடிப்படையில் பகுதிநேர ஆசிரியர்களாக திருவாளர்கள். ராகுலன், பிருந்தாபன், யதுசன், மதுரதன் ஆகியோரும் பணியாற்றி வந்தனர்.

## இணைந்துகொண்டோரும் விலகிச் சென்றோரும்

### இணைந்துகொண்டோர்

செல்வி இ. திலகந்தினி 01.01.2018. அன்று பயில்நிலை எழுதுநராக இணைந்துகொண்டார்.
திரு. த. பாஸ்கரன் 01.01.2018. அன்று பாதுகாப்பு உத்தி யோகத்தராக இணைந்துகொண்டார்.
செல்வி இ. ரஜீவனா 01.04.2018. அன்று பயில்நிலை எழுதுநராக இணைந்துகொண்டார்.
செல்வி. சி. ரஜிதா 14.04.2018. அன்று சமையல் உதவியாளராக இணைந்துகொண்டார்.
செல்வி செ. கண்ணகி, 21.05.2018. அன்று பயில்நிலை எழுதுநராக இணைந்துகொண்டார்.
செல்வி. தி. சர்மி, 02.06.2018. அன்று பயில்நிலை ஆசிரியராக இணைந்துகொண்டார்.
செல்வி அ. ரெபேக்கா, 29.10.2018. அன்று சமையல் உதவியாளராக இணைந்துகொண்டார்.
செல்வி க. தனுஜா நெகேமி, 05.11.2018. அன்று பயில்நிலை எழுதுநராக இணைந்துகொண்டார்.
இவர்கள் யாவரினதும் பணிகள் சிறக்க எமது வாழ்த்துக்கள்.

### விலகிச் சென்றோர்

பயில்நிலை எழுதுநராகப் பணியாற்றிய செல்வி அ. எமரென்சியா பல்கலைக்கழக அனுமதி கிடைத்தமை காரணமாக 12.01.2018. அன்று பணியிலிருந்து விலகிச்சென்றார்.
கடந்த ஐந்து ஆண்டு காலமாக எமது நிறுவனத்தில் சமையல் உதவியாளராகப் பணியாற்றிய செல்வி அ. நவதிரேஸ், அரச

பயில்நிலை எழுதுநராகப் பணியாற்றிய செல்வி இ.திலகந்தினி 01.04.2018. அன்று தனது பணியிலிருந்து விலகிச் சென்றார்.
மற்றுமொரு பயில்நிலை எழுதுனரான செல்வி இ.ரஜீவனா 05.05.2018. அன்று பணியிலிருந்து விலகிச் சென்றார்.
உதவி விடுதி மேற்பார்வையாளராகப் பணியாற்றிய செல்வி இ.கலைமதி, திருமணத்தை முன்னிட்டு 02.06.2018. அன்று பணியிலிருந்து விலகிச்சென்றார்.
பயில்நிலை ஆசிரியராக இணைந்துகொண்ட செல்வி தி. சர்மி 01.10.2018. அன்று சுய விருப்பின் பேரில் பணியிலிருந்து விலகிச் சென்றார்.
சமையல் உதவியாளராகப் பணியாற்றிய செல்வி அ. சர்மிளா 03.10.2018. அன்று பணியிலிருந்து விலகிச் சென்றார்.
விசேட ஆசிரியையாகப் பணியாற்றிய செல்வி ம. துஷயந்தினி கிளறா 31.12.2018. அன்று சுய விருப்பின் பேரில் தனது பணியிலிருந்து விலகிச்சென்றார்.
இவர்கள் அனைவரதும் எதிர்காலம் சிறக்க எமது இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

## விழாக்களும் நிகழ்வுகளும்

11.01.2018. கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி உதய நாளும் பரிசுத் தினமும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருமதி. வனஜா செல்வரட்ணம், பணிப்பாளர், சமூக சேவைத் திணைக்களம் அவர்களும் சிறப்பு அதிதிகளாக திருமதி. மதுமதி வசந்தகுமார், பிரதேச செயலர், உடுவில் அவர்களும் திரு. சி. சுந்தரேஸ்வரன் சிரேஸ்ட பிராந்திய முகாமையாளர், கற்றன் நஸ்னல் வங்கி, வடக்கு மாகாணம் அவர்களும் கலாபூஷணம் பாஸ்கரன் ஆசாரியார், பாஸ்கரன் சிற்பாலயம், யாழ்ப்பாணம் அவர்களும் திரு. சி.க. விமலகுமார், கால்நடை வைத்திய அதிகாரி, உடுவில் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ அதிதியாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை அவர்களும் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

14.01.2018. தைப்பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை வழமை போல இனிய இதயங்கள் அமைப்பினரின் ஒன்றுகூடலும் நடைபெற்றது. இனிய இதயங்கள் அமைப்பினரால் பத்து தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன. 15.01.2018. பட்டிப் பொங்கல் சிறப்பாக நடைபெற்றது.

ஹ26.01.2018. டில்கோ ஹோட்டலில் நடைபெற்ற இந்தியக் குடியரசு தினத்தில் நானும் பொருளாளரும் செயலாளரும் கலந்து கொண்டோம்.

17.02.2018. செல்வன் முரளிதரன் சுலக்சன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்தில் என்னோடு உப தலைவர், நிர்வாக உறுப்பினர் திரு. சுத்தானந்தன், மற்றும், பிள்ளைகள் கலந்து சிறப்பித்தனர்.

18.02.2018. மானிப்பாயிலுள்ள "புதிய அவதாரம்" அமைப் பினரின் சிறப்பு நிகழ்வில் நான் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டேன். அங்கு நடந்த கலை நிகழ்வுகளில் வாழ்வக மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

21.02.2018. எமது அன்பர் திரு. ஜெயபாலன் அவர்களின் அழைப்பின் பேரில் சங்கானை நிகர வைரவர் ஆலயத் திருவிழாவுக்கு உப தலைவர், திரு. சுத்தானந்தன் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் சென்று வந்தனர்.

24.02.2018. இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீமான் ஆறுமுகம் நடராஜன் அவர்களுக்கு வாழ்வகத்தில் பிரியாவிடை அளிக்கப் பட்டது. மறு தினம் 25.02.2018. அன்று டில்கோ ஷோட்டலில் நடைபெற்ற அவரது பிரியாவிடை நிகழ்வில் என்னோடு, உப தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

03.03.2018. வாழ்வகத் தலைவர் திரு. ஆறுமுகம் ரவீந்திரன் அவர்களின் பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும், நிர்வாக உறுப்பினர்கள், பிள்ளைகள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

19.03.2018. யாழ் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலிருந்து சாரணர் கலைக் குழு Vக்கான உணர்வுபூர்வ அபிவிருத்திச் செயற் திட்டத்தினை மேற்கொள்வதற்காக எமது மாணவர்களுடன் மகிழ்வூட்டும் நிகழ்விலும், விளையாட்டு நிகழ்விலும் பத்து மாணவர்களும் திருமதி திருநிறைச்செல்வன், சாரணர் பொறுப்பாசிரியர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

21.03.2018. பொலிஸ் தினம், சுன்னாகம் பொலிஸ் நிலை யத்தினால் நடத்தப்பட்டது. இதில் பொறுப்பதிகாரி திரு. செல்வக் குமார் அவர்களுடன் பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டு பிள்ளைகளுக்கான பாவனைப் பொருட்களை வழங்கினார்கள்.

14.04.2018. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, அலுவலக முன்றலில் பொங்கல் சிறப்பாக இடம்பெற்றதோடு ஊழியர்களுக்கான கைவிசேடமும் வழங்கப்பட்டது.

30.04.2018. தென்இந்திய பாடகர் கானா பாலா அவர்கள் தனது குடும்பத்தோடு வாழ்வகத்துக்கு வருகைதந்து பிள்ளைகளை மகிழ்வித்துச் சென்றார்.

11.05.2018. இராமநாதன் கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியரும் எமது பகுதிநேர ஆசிரியராக அரும் பணியாற்றியவருமான திருமதி யோகராஜா அவர்களின் மகனின் திருமண நிகழ்வில் வாழ்வகம் சார்பாக நானும் உப தலைவரும் சில பிள்ளைகளும் கலந்து கொண்டு மணமக்களுக்கு அன்பளிப்பும் வழங்கினோம்.

01.06.2018. எமது வாழ்வக நலனில் அதீத ஈடுபாடு கொண்டவரும் தனது உறவினர்கள் மூலமாக எமது பிள்ளை களுக்குத் தொடர்ச்சியாகக் கல்வி நன்கொடைகளைப் பெற்றுத் தருபவருமான ஓய்வு நிலை அதிபர் திரு. சச்சிதானந்தம் அவர்களின் கணித நூல் வெளியீடு எனது தலைமையில் செல்லா மண்டபத்தில் நடைபெற்றது.

09.06.2018. மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு நிகழ்வுக்கு நான் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டிருந்தேன். என்னுடன் உப தலைவர், நிர்வாக அங்கத்தவர் திரு. சுத்தானந்தன் பகுதிநேர ஆசிரியை செல்வி நிரோசனா மற்றும் சில பிள்ளைகள் ஆகியோர் அந்நிகழ்வில் கலந்துகொண்டனர். நாங்கள் 10.06.2018. அன்று நிகழ்வுகளில் கலந்துகொண்டுவிட்டு அன்றே அங்கிருந்து புறப்பட்டோம். எமது நிறுவனத்துக்கும் மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாட சாலைக்கும் இடையிலான உறவுநிலைகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு இப் பயணம் பெரிதும் துணையாயமைந்தது.

01.07.2018. கிந்து போர்ட் ராசரத்தினம் அவர்களின் 134 ஆவது பிறந்த நாள் நிகழ்வில வாழ்வகம் சார்பாக நிர்வாக அங்கத்தவர் திரு. சுத்தானந்தன், மற்றும் இரு ஆசிரியர்கள், சில பிள்ளைகள் கலந்துகொண்டனர்.

07.07.2018. அன்று யாழ் போதனா மருத்துவமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட தேவை கொண்டோர் தொடர்பான பயிலமர்வில் என்னோடு , உப தலைவர், மற்றும், ஆசிரியர்களான செல்விகள் துஸ்யந்தி கிளரா, ஜீவனா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

08.07.2018. அமரர் லயன் சண்முகநாதன் அவர்களின் மறைவையொட்டி, துயர் பகிர்வதற்காக நானும் உப தலைவர், நிர்வாக அங்கத்தவர்களான திருவாளர்கள், கமலநாதன், சுத்தானந்தன் மற்றும், மாணவர்களான பிரகான், தீபன் ஆகியோரும் அவரின் இல்லம் சென்றோம்.

08.08.2018. ஆங்கில தினம் சிறப்பாக நடைபெற்றது. இதில் கலாநிதி கருணா சிவாஜி, சிரேஸ்ட விரிவுரையாளர், ஆங்கிலத் துறை, யாழ் பல்கலைக்கழகம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

15.08.2018. இந்தியத் துணைத் தூதரகத்தோடு நாம் மிக நெருக்கமான உறவினைப் பேணிவருபவர்கள் என்ற வகையில் அவர்களது அனைத்து நிகழ்வுகளுக்கும் நாம் அழைக்கப்படுவது வழக்கம். அந்த வகையில் இந்தியாவின் 71 ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நானும் உப தலைவரும் செயலாளரும் இந்திய இல்லம் சென்றோம்.

11.09.2018. கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நிகழ்வு உப தலைவர் திருமதி. மோகனவதனி ரவீந்திரன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீமான் சங்கர் பாலச்சந்திரன், துணைத் தூதுவர், இந்தியத் துணைத் தூதரகம், யாழ்ப்பாணம் அவர்களும் சிறப்பு அதிதிகளாக திருவாளர்கள் சி. ஜெயகாந்த, பிரதேச செயலர், உடுவில் அவர்களும் அ. ரவீந்திரன், தலைவர், தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை, மட்டக்களப்பு அவர்களும் திரு. திருமதி திலகராஜ், டில்கோ ஹோட்டல் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். திரு. செ.ரவீந்திரன், சிரேஸ்ட விரிவுரையாளர், புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்கள் "அறிநிலை மனமும் மனித மேம்பாடும். ஆன்மிக மற்றும், உளவியல் பார்வை எனும் தலைப்பில் நினைவுப் பேருரையினை நிகழ்த்தினார். மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை தலைவர் திரு. அ. ரவீந்திரன் அவர்களுடன் பொருளாளர் திரு. வரதராஜன், உப தலைவர் திரு. இதயராஜன் ஆகியோருடன் மேலும் ஆறு ஆசிரியர்களும் நிகழ்வில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

16.09.2018. Deaf and Blind Lanka அமைப்பினரால் 17.09.2018. அன்று பிரித்தானிய உயர் ஸ்தானிகர் இல்லத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட ஒன்றுகூடல் நிகழ்வில் வாழ்வகம் சார்பாகக் கலந்துகொள்வதற்கு நானும் உப தலைவரும் பொருளாளரும் கொழும்பு சென்றோம். இவ்வொன்றுகூடலின்போது நாம் பல விடயங் களைத் தெரிந்துகொண்டதோடு, பலருடனான தொடர்புகளையும் ஏற்படுத்த முடிந்தது.

24.09.2018. வாழ்வக மாணவர்கள் உப தலைவர் திருமதி மோகனவதனி ரவீந்திரன் தலைமையில் காங்கேசன்துறை கடற் கரைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். தொடர்ந்து திருநெல்வேலி யிலுள்ள அம்மாச்சி உணவகத்துக்கு, காலை உணவுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

25.09.2018. கம்பன் கழகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட இசை வேள்வி நிகழ்வுக்கு சில மாணவர்கள் துர்க்கா மணி மண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

07.10.2018. உலக ஆசிரியர் தினம் சிறப்பாக முன்னெடுக்கப் பட்டது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னைநாள் விரிவுரையாளர் திருமதி. பொன்னம்பலம் அவர்கள் அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். சுவிற்சர்லாந்திலுள்ள பூர்ணாச்சிரமத்தின் யாழ் கிளையின் ஆரம்ப நிகழ்வில் நான் கலந்துகொண்டு உரை யாற்றினேன்..

08.10.2018. நவராத்திரி பூசை ஆரம்பமானது. அன்று முதல் தினமும் வாழ்வகத்தில் சிறப்பான வழிபாடுகள் நடைபெற்றன.

14.10.2018. "வாணி விழாவும் முத்தமிழ் விழாவும்" நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் திருமதி. குககுமாரி விஜய ரகுநாதன், ஓய்வுநிலை அதிபர் அவர்கள் கலந்து சிறப்பித்தார். எமது பிள்ளைகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

14.10.2018. இலங்கை அந்தகர் நலன்புரிச் சபையால் வழங்கப்படும் கல்வி நன்கொடையினைப் பெற்றுக்கொள்வதற்காக எமது மாணவர்களான செல்வன் தினேசன், கம்சிகன், செல்வி டல்சிகா செல்வன் அருண்குமார் ஆகியோர் எமது ஆசிரியர்களான செல்வி ஜீவனா திரு. வசீகரன் ஆகியோரால் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

17.10.2018 என்னுடன் ', செல்வன் ராஜ்குமார், செல்வன் ரனிஸ்ரன் ஆகியோர் பிராந்திய சுகாதார அலுவலகத்தில் நடைபெற்ற நவராத்திரி கலைநிகழ்வில் கலந்துகொண்டனர்.

19.10.2018. நானும் உப தலைவரும், ஆசிரியர் செல்வி துஸ்யந்தி கிளரா, திருமதி. மாலினி உலகநாதன் ஆகியோரும் ' எமது பிள்ளைகளான செல்விகள் தமிழரசி, யனுபா, அலஸ்ரீனா, கீர்த்தனா, அசானி, செல்வன் அபிவர்னன், ராஜ்குமார், அலெக்ஸ் ரனிஸ்ரன் ஆகியோரை ஐ.பி.சி. தொலைக்காட்சி நிலையத்துக்கு "கலைகள் பேசட்டும்" நிகழ்ச்சியில் பங்குகொள்வதற்காக அழைத்துச் சென்றோம். .

21.10.2018. ஏழாலை மேற்கு மாதர் அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திறப்பு விழாவில் வாழ்வகம் சார்பாக நான் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டேன். அறநெறிக் கழகத்தால் நடத்தப்பட்ட நாவலர் பேச்சுப் போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதலிடம்பெற்ற எமது மாணவர் செல்வன் அமல அசாம் இந் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டடார். ஆசிரியர் செல்வி ஜீவனா, மற்றும், சில பிள்ளைகளும் கலந்துகொண்டனர். அன்று விவசாயத் திணைக் களத்தால் ஒரு நீரிறைக்கும் மின் மோட்டார் வழங்கப்பட்டது.

22.10.2018. சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினருடன் இணைந்து சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டது. பிற்பகல் 03.30. மணியளவில் வெள்ளைப் பிரம்பு ஊர்வலம் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றலிலிருந்து ஆரம்பமாகி 04.30 மணியளவில் வாழ்வகத்தை அடைந்தது. தொடர்ந்து வாழ்வகத்தில் பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

24.10.2018. நலன்விரும்பி திரு. சிறில் சுகந்தரன் அவர்களின் மரண வீட்டுக்கு நானும் செயலாளரும் பொருளாளரும் நிர்வாக அங்கத்தவர் திரு. கமலநாதன் அவர்களும் சென்றுவந்தோம்.

25.10.2018. N.P.coda.நிறுவனத்தின் ஸ்தாபகரும் முதலாவது தலைவருமான திரு. வெ. சுப்பிரமணியம் அவர்களின் பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொண்டதோடு அவருக்கு வாழ்வகம் சார்பாக ஓர் அன்பளிப்பும் வழங்கினேன்.

17.11.2018. பிராந்திய அலுவலர் திரு. செல்வம் அவர்களின் தலைமையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் முப்பது சமூக சேவை உத்தியோகத்தர்கள் வாழ்வகத்தைத் தரிசிப்பதற்காக வருகைதந்தனர்.

11.11.2018. எமது விருந்தினர் இல்லத்தின் மேல் மாடி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

22.11.2018. N.P.Coda நிறுவனத்தின் பொதுக் கூட்டத்துக்குத் நான் சென்றுவந்தேன்.

23.11.2018. மன்னார் வாழ்வோதய நிறுவனத்திலிருந்து விசேட தேவை உடைய பிள்ளைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்பட சுமார் 35 பேர் வாழ்வகத்துக்கு வருகைதந்தனர். அன்று மாலை பகவான் ஸ்ரீஸத்தியஸாயிபாபாவின் 93 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு நான் மற்றும், ஆசிரியர்களான செல்விகள்

28.11.2018. தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப் பட்ட போட்டிகளில் முதலாம் இடம் பெற்றவர்களான செல்வன் அன்ருட் யக்சன், அமலநிதுசன், பிரகான், செல்வி அலஸ்ரீனா ஆகியோர் ஆசிரியர்களான திரு. வசீகரன், செல்வி கிளரா ஆகியோருடன் கொழும்பு சென்றனர்.

30.11.2018. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற கொள்ளளவு விருத்தி செயலமர்வில் கலந்துகொண்ட சுமார் 45 கல்வியியலாளர்கள் வாழ்வகத்தைத் தரிசிப்பதற்காக வருகைதந்தனர்.

01.12.2018. வவுனியா வரோட் நிறுவனத்தால் நடத்தப்பட்ட உலக மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகளில் கலந்து கொள்வதற் காகவும் பரிசில் பெறுவதற்காகவும் எமது 17 பிள்ளைகள் செல்விகள் ஜீவனா, துரேசிகா, நாகபூபதி ஆகியோருடன் வவுனியா சென்று வந்தனர். அதே தினத்தில் உடுவில் மகளிர் கல்லூரியில் வலிகாமக் கல்வி வலயத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட உலக மாற்றுத் திறனாளிகள் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக எமது பிள்ளைகளான செல்விகள் கீர்த்தனா, லோகேஸ்வரி செல்வன் அபிவர்னன் ஆகியோர் ஆசிரியர் செல்வி கிளராவுடன் சென்றுவந்தனர்.

02.12.2018. ஒளி விழா சிறப்பாக நடைபெற்றது. அருட்பணி ஜோன் றெக்சன் அடிகளார் திருப்பலி நிறைவேற்றியதுடன் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

04.12.2018. உடுவில் ஆர்க் பாடசாலையில் நடைபெற்ற ஒளி விழா நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஆசிரியர் செல்வி கிளராவுடன் எமது ஐந்து பிள்ளைகள் சென்றுவந்தனர்.

08.12.2018. செயல்முறைப் பரீட்சை ஒன்றினை மேற் கொள்ளும்பொருட்டு தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முதுமாணிக் கற்கை நெறியினை மேற்கொண்டுள்ள சுமார் அறுபது தமிழ், சிங்கள ஆசிரிய மாணவர்கள் திருமதி. வினித்தாஜினி, திருமதி. சிறியாணி மல்லிகா ஆகியோர் தலைமையில் வருகைதந்தனர். அத்தோடு வலிகாமக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சுமார் 35 விசேட தேவை கொண்ட மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. துஸ்யந்தன் தலைமையில் வருகை தந்தனர்.

11.12.2018. என்.பி.கோடா நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப் பட்ட "பணியகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பண்பும் வாழ்வும் சமூகம் சார் வலுவூட்டல் திட்டமும்" என்னும் தலைப்பிலான செயலமர்வு அருட்பணி ஜேக்கப் அவர்களின் தலைமையில்

## செயற்பாடுகளும் சாதனைகளும்

விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டையும் அதன் ஊடான வாழ்வு மேம்பாட்டையும் நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் ஒரு நிறுவனம் என்ற வகையில் நாம் கடந்த காலத்தில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டுவந்துள்ளோம். பிள்ளைகளுக்கான உணவு, உடை, உறையுள் மற்றும், கல்வி, மருத்துவ வசிதகள் உட்பட்ட அனைத்து வசதிகளையும் முற்றிலும் இலவசமாகவே வழங்கி வருகின்றோம். பிள்ளைகளுக்குத் தேவையான பிறேயில் உபகரணங்கள் மற்றும், கற்றலை இலகுபடுத்த உதவக் கூடிய ஒலிப் பதிவுக் கருவிகள், மடிக் கணனிகள் மற்றும், தேவையான புத்தகங்கள், பிறேயில் புத்தகங்கள், பிறேயில் எழுதுவதற்கான காகிதங்கள் உட்பட்ட யாவற்றையும் முற்றிலும் இலவசமாக வழங்கி வருகின்றோம். அத்தோடு பிள்ளைகளுக்கான பிரத்தியேக வகுப்புக்களையும் நடத்தி வருகின்றோம். கூடவே, தேவைக்கேற்ப சில பிள்ளைகள் நிறுவனத்துக்கு வெளியே பிரத்தியேக வகுப்புக் களுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளோம். மேலும் பிள்ளைகளினதும் ஆசிரியர்களினதும் திறன்களை மேம்படுத்தும் வகையிலான செயலமர்வுகள், பயிலமர்வுகள், சுற்றுலாக்கள் போன்ற வற்றையும் ஏற்பாடுசெய்து வருகின்றோம். அத்தோடு, தமிழ்த்தினம், ஆங்கில தினம், வெள்ளைப் பிரம்பு தினம், வாணி விழா, ஒளி விழா போன்ற நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றோம். மேலும் வெளி இடங்களில் நடைபெறும் விழாக்கள், நிகழ்வுகளில் கலந்து கொள்ளும், பங்குகொள்ளும் வாய்ப்புக்களையும் பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுத்து வருகின்றோம்.

அத்தோடு, பல்கலைக்கழகத்தில் பயிலும் எமது மாணவர் களுக்கான பணம் மற்றும், இதர தேவைகள் அனைத்தையும் நாம் முற்றாகப் பூர்த்திசெய்து வருகின்றோம்.

எமது பிள்ளைகளுக்குச் சுத்தமான பசுப் பாலை வழங்கும் நோக்கோடு நாம் மாடு வளர்ப்பையும் மேற்கொண்டு வருகிறோம். அத்துடன், மாட்டுச் சாணத்தைப் பயன்படுத்தி உயிர் வாயுக் கூடம் ஒன்றினையும் பராமரித்து வருகின்றோம். இதன் மூலம் கிடைக்கும் உயிர் வாயு எமது சமையலுக்கான விறகுத் தேவையினைக் கணிசமான அளவு பூர்த்திசெய்து வருகின்றது.

வாழ்வகத்தின் எதிர்கால நலன்களைக் கருத்திற்கொண்டு வாழ்வகத்துக்கு அண்மையிலுள்ள மாடி வீட்டுடனான ஒன்றரைப் பரப்பு காணி 9 மில்லியன் ரூபாவுக்குக் கொள்வனவுசெய்யப்பட்டது. தற்போது அது "விருந்தினர் விடுதி" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தற்போது எம்மிடமுள்ள பஸ், காயேஸ் வான், ஆட்டோ ஆகிய வாகனங்கள் தரித்து நிற்கக்கூடியவாறான வசதியான வாகனத்தரிப்பிடமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

எமது பல்கலைக்கழக மாணவரான திரு. சிறீதரன் யோகதாஸ் அவர்களுக்கு மீண்டுமொரு கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டிய தேவை ஏற்பட்டதன் காரணமாக அவருக்கு ஒரு இலட்சத்து மூவாயிரம் ரூபா எம்மால் வழங்கப்பட்டது. இதில் ஐம்பதாயிரம் ரூபாவினை திரு. வரதராஜ சர்மா ஸ்ரீகாந்தன் அவர்கள் ஊடாக கனடாவில் வசிக்கும் திரு. நிதர்சன் நித்தியானந்தராஜா அவர்களும் மேலும் ஒரு ஐம்பதாயிரம் ரூபாவினை திருமதி. பிரவீணா சுகிராஜ் அவர்கள் மூலமாக டென்மார்க்கில் வசிக்கும் திருமதி. குமுதினி சத்தியலிங்கம் அவர்களும் வழங்கியிருந்தனர். இவர் களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி ஞாபகார்த்த இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம் தொடர்ந்தும் எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 104 வறிய பாடசாலை மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

பெற்றோர்களின் அறியாமை காரணமாகவும் வேறு இன்னோரன்ன காரணங்களாலும் தமது வீடுகளிலேயே முடங்கி இருக்கின்ற விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளைத் தேடி அவர்களையும் கல்வி நீரோட்டத்தோடு இணைக்கின்ற முயற்சியில் தொடரந்தும் நாம் ஈடுபட்டுள்ளோம். இதன் பயனாக பதினொரு பிள்ளைகள் கடந்த ஆண்டில் மட்டும் வாழ்வகத்தோடு இணைக்கப் பட்டுள்ளனர்.

எமது மாணவரான திரு. சொர்ணலிங்கம் தர்மதன் யாழ். பல்கலைக் கழகத்தில் தனது தனது சட்டமாணிக் கற்கை நெறியினைப் பூர்த்திசெய்துள்ளார். இவர் எமது வாழ்வகத்திலிருந்து வெளியேறும் இரண்டாவது சட்டத்தரணி என்பதும் தமிழ் பேசும் விழிப்புலனற்ற இரண்டாவது சட்டத்தரணி என்பதும் இங்கு பெருமையுடன் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவரின் எதிர்காலம் சிறக்க எமது நல் வாழ்த்துக்கள்.

மேலும் எமது மாணவர்களான செல்வி லோ. கட்சனி கலைப் பிரிவு மூன்றாம் ஆண்டிலும் திரு. சி. சிவகனிஸ்டன் கலைப் பிரிவு இரண்டாம் ஆண்டிலும் திருவாளர்கள். க. பிரகான், பொ. தீபன், சி. யோகதாஸ், செல்விகள் வி. நளாயினி, த. லாவண்யா ஆகியோர் கலைப் பிரிவு முதலாம் ஆண்டிலும் கல்வி பயின்று வருகின்றனர்.

திரு. கலாமோகன் பிரகான் இவ்வாண்டு நடைபெற்ற இளம் சைவப் புலவர் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடம் பெற்று ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகள் நடைபெற்ற இப் பரீட்சையில் அதி உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றவர் இவரே என்பது இங்கு பெருமையோடு குறிப்பிடத்தக்க விடயமாகும். இதற்கான பட்டமளிப்பு விழா கடந்த 15.12.2018. அன்று நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கடந்த 2017ல் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் 2A Cபெற்று எமது மாணவியான செல்வி வானுஜா செல்வராஜா 2019 ல் பல்கலைக் கழகம் செல்ல உள்ளார்.

2018. ல் நடைபெற்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய செல்வன் அன்ருட் யக்சன், 3A சித்தி பெறறு எமக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். இவர் 2.2094 சற் புள்ளிகள் பெற்றமையும் மாவட்ட ரீதியாக 3 ஆம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக 61 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டமையும் பெரும் சாதனைகளாகவே அமைந்துள்ளன. மேலும் மற்றுமொரு மாணவரான செல்வன் அமலநிதுசன் 3C பெற்று சித்தியடைந் தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் எமது மாணவியான செல்வி ஜெ. லோகேஸ்வரி 3A,3B.C , 2S பெற்று தற்போது க.பொ.த. உயர் தரத்தில் கல்வி கற்று வருகின்றார். மேலும் செல்வி ந. டல்சிகாவும் க.பொ.த. உயர் தரத்தில் பயின்று வருகின்றார்.மேலும் செல்விகள் ஜெ. தமிழரசி, வெ. ஜனுபா ஆகியோர் 2019 டிசம்பர் மாதம் நடைபெற உள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர். ஏனைய பிள்ளைகள் இதர வகுப்புக்களில் சிறப்பாகக் கல்வி கற்று வருகின்றனர்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்பட்ட கிராமியப் பாடல் போட்டியில் செல்வி அலஸ்ரினா, செல்வன் அமலநிதுசன் ஆகியோர் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தையும் செல்வன் அன்ருட் யக்சன் இளம் பாடகர் போட்டியிலும் பேச்சுப் போட்டியிலும் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தையும் திரு. கலாமோகன் பிரகான் அறிவிப்பாளர் போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதலாம் இடத்தையும் பெற்று எமக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். செல்வன் அமல அசாம் அறநெறிப் பேச்சுப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். மேலும் செல்வி லோகேஸ்வரி அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

ஞாபகார்த்த பேச்சுப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் சேர் பொன். இராமநாதன் ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் பெற்று தங்கப் பதக்கத்தையும் வென்று எமக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்.

இம் மாணவச் செல்வங்கள் அனைவரும் கல்வியில் சிறந்து வாழ்வில் வளங்காண எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**எதிர்காலத் திட்டங்கள்**

எமது வாழ்வக நிறுவனமானது தனது முப்பத்தோராவது அகவையில் நடை பயின்று வருகின்றது. இப் புதிய ஆண்டிலும் எமது பணிகளை மேன்மேலும் விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் நாம் திட்டமிட்டுள்ளோம்.

பொதுவாக விழிப்புல வலுவிழந்த மாணவர்கள் நூல்களை வாசிப்பதில், கற்றுக்கொள்வதில் பல மட்டுப்பாடுகள் காணப்படு கின்றன. எனினும், இம் மட்டுப்பாடுகளை முடிந்தவரை தாழ்த்த வேண்டியது மிக மிக இன்றியமையாதது என்ற வகையில், இவ் ஆண்டினை நூலறிவு மேம்பாட்டுக்குரிய ஆண்டாகப் பிரகடனப் படுத்துவது என நாம் தீர்மானித்துள்ளோம். இவ்வாண்டில் நாம் பிள்ளைகளுக்கான பாட நூல்கள், மற்றும், பொதுவான நூல்களை ஒலி நூல்களாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளோம். இவ்வொலி நூல்கள் மிக விரைவாக எமது பிள்ளைகளைச் சென்றடையும் என்ற வகையில், அவர்களது நூலறிவை மேம்படுத்து வதில் இவை பெரும் பங்கு வகிக்கும் என உறுதியாக நம்புகின்றோம். அதேவேளை, பிறேயில் நூல்களை வாசிக்கும் திறனை மேம்படுத்த வேண்டிய இன்றியமையாமையையும் நாம் மறந்துவிடவில்லை. எமது அன்பர் திரு. பா. ஜெயபாலன் அவர்களின் முயற்சியால் தொடர்ந்தும் எமக்கு இந்தியாவிலிருந்து பல பயன் மிக்க பிறேயில் நூல்கள் கிடைத்து வருகின்றன. இவற்றை எமது பிள்ளைகள் நன்கு வாசித்துப் பயனடையும் வகையில் ஊக்குவிப்புக்களைத் தொடர்ந்தும் வழங்க நாம் திட்டமிட்டுள்ளோம். இவ்விடத்தில் திரு. ஜெயபாலன் அவர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமக்கென ஒரு விளையாட்டு மைதானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான எமது முயற்சி கடந்த ஆண்டிலும் கைகூடாது போய்விட்டது. இம்முயற்சியை இவ்வாண்டில் மேலும் முனைப்புடன் முன்னெடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

தற்போது எமது வாழ்வகத்தில் நடைபெற்று வரும் இசை வகுப்புக்களை மேலும் விருத்திசெய்யவும் விரிவுபடுத்தவும் நாம் திட்டமிட்டுள்ளோம். இதற்கு உதவும் வகையில் எமது அன்பர் திரு.

திருச்செல்வநாதன் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக ஐக்கிய ராட்சியத்தில் வதியும் திருமதி. கலாராணி குடும்பத்தினர் சுமார் நான்கு இலட்சம்ரூபா பெறுமதியான ஒரு ஒப்ரப்பாட், 3ஓகன்கள், 1 டிறம், 1 வயலின், 1 தபேலா, 1 டொல்கி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் திருமதி. கலாராணி குடும்பத் தினர்க்கும் எப்போதும் எமக்கு உறுதுணை புரிந்துவரும் திரு. திருச்செல்வநாதன் அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**நெஞ்சார்ந்த நன்றிகள்**

எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் உறு துணையாயுள்ளவர்கள் எமது நன்கொடையாளர்களே என்றால் அதில் மிகையொன்றும் இல்லை. அந்த வகையில் அவர்கள் அனைவரும் என்றுமே எம்மால் மறக்கமுடியாதவர்களும் எமது ஆழ்ந்த நன்றிக்குரியவர்களுமாகின்றனர். இவர்கள் ஒவ்வொரு வரையும் தனித்தனியே குறிப்பிட்டு நன்றி தெரிவிக்கவேண்டியது எமது கடமையாக இருந்தபோதிலும் விரிவுக்கஞ்சி அதனை விடுத்து, ஒட்டுமொத்தமாக அனைத்து அன்பர்களையும் எம் அகத்திலிருத்தி, எமது ஆழ்ந்த நன்றிகளையும் அன்பையும் அவர்களுக்குக் காணிக்கையாக்குகின்றோம்.

வாடகை வீடொன்றில் மிகச் சிறிய நிறுவனமாக ஆரம்பிக்கப் பட்ட எமது நிறுவனமானது இன்று வளர்ந்து கிளை பரப்பித் தலை நிமிர்ந்து நிற்கின்றது. பிள்ளைகளுக்கான அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கான மாதாந்த உதவித் தொகை உட்பட அனைத்து வசதிகளும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. போட்டிகள் மற்றும், ஏனைய தேவைகளுக்காக எமது பிள்ளைகள் குடாநாட்டுக்கு வெளியே செல்கின்றபோது அவர்களுக்கான, மற்றும், அவர்களது உதவியாளர்களுக்கான பிரயாணம் மற்றும், இதர வசதிகள் யாவுமே எம்மால் வழங்கப்படுகின்றன. இத்தனைக்கும் காரணகர்த்தாக்கள் எமது நன்கொடையாளர்களே. உணவு நன்கொடையாகவும் கல்வி நன்கொடையாகவும் பொது நன்கொடையாகவும் இன்னும் பொருளாகவும் இவர்கள் வழங்கி வரும் இந்த ஒப்பற்ற உதவிகளுக்காக எத்தனை தடவைகள் நன்றி செலுத்தினாலும் அது ஈடாகாது. இவர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளும் எமது வாழ்வக அன்னையின் ஆசிகளும் கிட்டவேண்டும். இவர்கள் தமது வாழ்வில் அனைத்து வசதிகளும் வளங்களும் பெற்று, என்றும் இனிது வாழவேண்டும் என்றும் உளமார வாழ்த்துகின்றோம். மேலும் எமது செயற்பாடுகள் யாவற்றிலும் எமக்குத் துணைபுரிகின்ற எமது சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும், ஊழியர்கள், அரச அதிபர் மற்றும் அவர்தம் ஊழியர்கள், எமது பிரதேச செயலர்

# வாழ்வக நிகழ்வுகள்



கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவுநாளும்
நினைவுப் பேருரையும்



சேவையாளர் கௌரவிப்பு நிகழ்வு



தைப்பொங்கல் நிகழ்வு



இனிய இதயங்கள் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட
பொங்கல் நிகழ்வு



English Day



உலக ஆசிரியர் தினம்



வாழ்வக மாணவிகளின் வரவேற்பு நடன நிகழ்வு



கலை நிகழ்வு

# 2018 க.பொ.த உயர்தர பரீட்சையில்
# சித்தி பெற்ற மாணவர்கள்




**சாதனை நிகழ்த்திய மாணவன்**

செல்வன். தவராசா அன்ருட் யக்ஷன்

3A

மாவட்ட மட்டம் - 03

அகில இலங்கை மட்டம் - 61



செல்வன். தவநாயகம் அமலநிதுஷன்

3C



அறநெறி தேசியமட்டம் பேச்சுப்போட்டி 3ம் இடம்



இளம் சைவப்புலவர் பரீட்சையில்
முதல்தரத்தில் சித்திபெற்றவர்



2017/ 2018ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு
அனுமதி பெற்ற மாணவர்கள்



2018/ 2019ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு
அனுமதி பெற்ற மாணவி

# வாழ்வகத்தில் கல்வி கற்று 2018ல் வேலைவாய்ப்பு பெற்ற மாணவர்கள்



திரு.யோகலிங்கம் சுதாகரன்
(ஆசிரியர்)



செல்வி ஞானசீலன் டில்வியா
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)



செல்வி வெற்றிவேல் தயாளினி
(சமூகசேவை உத்தியோகத்தர்)



செல்வி மார்க்கண்டு ராஜலக்சுமி
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)



செல்வி கிருபானந்ததேவன் ரேகா
(ஆசிரியர்)

மற்றும், அவர்தம் ஊழியர்கள், பிரதேச சபையினர், பொலிஸ் துறையினர் மற்றும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர் யாவருமே எமது நன்றிக்குரியவர்களாகின்றனர். மேலும் உதயன், தினக்குரல், வலம்புரி, காலைக்கதிர், பத்திரிகை நிறுவனங்கள் எமக்கு மிகுந்த ஆதரவு வழங்குவதோடு இலவசப் பத்திரிகை களையும் வழங்கி வருகின்றன. இந்நிறுவனங்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். மேலும், டான் தொலைக்காட்சி, ஐ.பி.சி. தொலைக்காட்சி, சக்தி தொலைக்காட்சி, யாழ் F.M. உட்பட அனைத்து ஊடகங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

எமது பிள்ளைகள் பயிலும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருமே எமது சிறப்பான நன்றிக்குரியவர்கள். மற்றும், எமது ஊழியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருமே எமது நன்றிக்குரியவர்கள். இவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.இன்றைய எமது பரிசுத் தின நிகழ்வில் நடைபெற உள்ள வீணாகான இசையரங்கு நிகழ்வை நடத்த உள்ள இலங்கையின் முதன்மை வீணைக் கலைஞர் திரு. வாகீசன் மற்றும், அவரது குழுவினர்க்கு எமது நன்றிகள். அத்தோடு, இந்நிகழ்வுக்கான நிதி அனுசரணையை வழங்கி உதவிய ஹற்றன் நஷனல் வங்கியினர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகள். எமக்கு மிகவும் நெருக்கமான ஒரு வங்கி என்ற வகையில், நாம் வேண்டுகோள் விடுக்கின்றபோதெல்லாம் அவர்கள் எமக்குப் பல உதவிகளை வழங்கி வருவதை இங்கு நன்றியோடு கூறிநிற்கின்றோம்.

எதிர்காலத்திலும் இதே மாதிரியான மாறாத அன்பையும் ஆதரவையும் நாம் அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் அன்புரிமை யோடு நாடி நிற்கின்றோம்.

நன்றி.

**தலைவர்,**
**வாழ்வகம்.**

# வாழ்வகம்
## (விழிப்புலவலுவிழந்தோர் இல்லம்)
## சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்
## இலங்கை
## நூலறிவு மேம்பாட்டு ஆண்டு
## 2019 ம் ஆண்டிற்கான உத்தேச நாட்காட்டி

**January**

| | | |
|---|---|---|
| **01/01/2019** | செவ்வாய் | புதுவருட பிரார்த்தனை |
| **06/01/2019** | ஞாயிறு | ஊழியர்களுக்கான கூட்டம்<br>மு.ப 10 மணி |
| **11/01/2019** | வெள்ளி | நிறுவுநனர் உதய நாளும் பரிசுத்தினமும்<br>8.45 மணி |
| **15/01/2019** | செவ்வாய் | தைப்பொங்கல் காலை -7 மணி<br>இனிய இதயங்கள் அமைப்பின்<br>ஒன்று கூடல் பி.ப 5மணி |
| **16/01/2019** | புதன் | பட்டிப்பொங்கல் மாலை 5 மணி |
| **19/01/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |
| **20/01/2019** | ஞாயிறு | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |

**February**

| | | |
|---|---|---|
| **03/02/2019** | ஞாயிறு | ஆசிரியர்,பெற்றோர்களுக்கான கூட்டம்<br>மு.ப 10 மணி |
| **19/02/2019** | செவ்வாய் | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **23/02/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |

## March

| | | |
|---|---|---|
| **03/03/2019** | ஞாயிறு | வாழ்வக தலைவர் பிறந்த தினம்<br>வாழ்வக சமூகத்தினரின்<br>ஒன்று கூடல் பி.ப 5 மணி |
| **20/03/2019** | புதன் | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **30/03/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |

## April

| | | |
|---|---|---|
| **14/04/2019** | ஞாயிறு | தமிழ், சிங்கள, புது வருடப்பிறப்பு<br>கைவிசேடம் - மு.ப 9 மணி |
| **19/04/2019** | வெள்ளி | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **20/04/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>01 பி.ப 4.30 மணி |

## May

| | | |
|---|---|---|
| **01/05/2019** | புதன் | உலக தொழிலாளர் தினமும்,<br>வாழ்வக ஊழியர் ஒன்று கூடலும். |
| **11/05/2019** | சனி | முத்தமிழ் விழா – மு.ப 9 மணி |
| **18/05/2019** | சனி | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **25/05/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |

## June

| | | |
|---|---|---|
| **01/06/2019** | சனி | ஆசிரியர்,பெற்றோர்களுக்கான கூட்டம்<br>மு.ப 10 மணி |
| **16/06/2019** | ஞாயிறு | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **29/06/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |

## July

| | | |
|---|---|---|
| **06/07/2019** | சனி | ஆங்கில தினம் மு.ப 9 மணி |
| **14/07/2019** | ஞாயிறு | ஊழியர்களுக்கான கூட்டம்<br>மு.ப 11 மணி |
| **16/07/2019** | செவ்வாய் | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **27/07/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |

## August

| | | |
|---|---|---|
| **10**,11,12/**08/2019** | | சனி,ஞாயிறு,திங்கள்<br>மாணவர் கல்விச்சுற்றுலா |
| **14/08/2019** | புதன் | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **31/08/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |

## September

| | | |
|---|---|---|
| **11/09/2019** | புதன | நிறுவுனர் நினைவு நாளும்,<br>நினைவுப் பேருரையும்<br>மு.ப 9 மணி |
| **13/09/2019** | வெள்ளி | முழநிலா<br>நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **15/09/2019** | ஞாயிறு | கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி<br>நினைவாக மஹாளய<br>கிரியைகள் - மு.ப 10.30. |
| **28/09/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |
| **29/09/2019** | ஞாயிறு | நவராத்திரி விரதாரம்பம் |

## October

| | | |
|---|---|---|
| **06/10/2019** | ஞாயிறு | உலக ஆசிரியர் தினமும், ஆசிரியர் கௌரவிப்பும்,வாணி விழாவும் முத்தமிழ் விழாவும் மு.ப 10 மணி |
| **13/10/2019** | ஞாயிறு | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **15/10/2019** | செவ்வாய் | சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் |
| **26/10/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |
| **27/10/2019** | ஞாயிறு | தீபாவளி பண்டிகை |

## November

| | | |
|---|---|---|
| **10/11/2019** | ஞாயிறு | ஆசிரியர், ஊழியர்களுக்கான கூட்டம் மு.ப 10 மணி |
| **12/11/2019** | செவ்வாய் | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **30/11/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |

## December

| | | |
|---|---|---|
| **01/12/2019** | ஞாயிறு | ஒளி விழா – மு.ப 9 மணி |
| **11/12/2019** | புதன் | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **21/12/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |

## வாழ்வகக் கீதம்

ஞான ஒளி தரும் வாழ்வகமே வாழி
ஞாலந் தனிலே விழிப்புல வலுவிழந்தோர்க்கு
ஞான ஒளி தரும் வாழ்வகமே.

ஊனக்கண் இழந்தாலும் ஞானக்கண்ணைத் திறந்தே
மௌன மொழி கல்விகலை மேதினியில் ஊட்டி வைக்கும்
ஞான ஒளிதரும் வாழ்வகமே.

அன்பொடு ஆற்றலும் அறிவொடு ஒழுக்கமும்
பண்பொடு பண்பாடும் பயனுறத் தரும் இல்லம்
இன்பமாய் எல்லோரும் இனித்திட வாழ்ந்திட
துன்பமெல்லாம் துடைக்கும் தொண்டுகள் செய்யும் இல்லம்



இயற்றி இசையமைத்தவர்

**மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்**

Kingos
mul 06|04 -18 -05
Jny 15|12|18 05

~~1120~~ ~~108~~ - ~~602~~
10|3|12

[illegible]



# வாழ்வக சமூகம்

021 224 0146,

076 8286331.

சாயி பிறிண்டேர்ஸ் - 077 2209[illegible]74.